Date : 15.06.2026.

பி.சா.1 : குமரவேல்

<u>பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் திருநெல்வேலியில் தொழில் செய்து வருகிறேன். பரணி பயர்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறேன். தீயணைப்பான் மற்றும் அது தொடர்புடைய பொருட்களை விற்பனை செய்து வருகிறேன். நான் தயார் செய்வது கிடையாது. பொருட்களை வாங்கி விற்பது வழக்கம். எனது அலுவலகத்தில் Fire extinguiser என்ற பொருளையும் வாங்கி விற்பது வழக்கம். Fire extinguiser என்பது கூம்பு வடிவில் உள்ள தீயணைப்பான் என்றால் சரிதான். நான் மேற்படி தீயணைப்பான் மட்டுமே வாங்கி விற்பனை செய்கிறேன். வேறு எந்த பொருளையும் வாங்கி விற்பது இல்லை. வழக்கு வாதியை எனக்கு நன்கு அறிமுகம் உண்டு என்றால் சரிதான். என்னுடைய வாதிக்கும் எனக்கும் வியாபார தொடர்பு என்பது Fire extinguiser என்று சொல்லக்கூடிய மேற்படி பொருயை வாங்குவதில் மட்டும்தான் என்றால் சரிதான். Fire extinguiser போன்று Reteater panel என்ற பொருளையும் வாங்கி விற்பது வழக்கம் என்றால் சரியல்ல. மேற்படி Reteater panel என்பது தீ மூலமாக புகை வந்தால் சத்தம் ஏற்படுத்தும். வழக்கின் வாதி SNR Traders பெயரில் விஜயநாராயணனம் INS கட்டபொம்மனில் ஒப்பந்தம் எடுத்து தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது Gmail விலாசம் என்பது baranifire@yahoo.in என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதியின் மின் அஞ்சல் முகவரி snrjeyakumar@gmail.com என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவரின் மின்அஞ்சலை நான் பயன்படுத்தியது கிடையாது. EVERTHING ELECTORNICS FORUS என்ற நிறுவனத்தில் இருந்து எனக்கு மின்னஞ்சல் வரும் என்றால் நியாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் 15.10.2014 ம் தேதியிட்ட மின்னஞ்சல் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. மேற்படி மின்னஞ்சலை வாதிக்கு நான் அனுப்பியதாக சொல்கிறார் என்றால் சரியல்ல. ஆனால் வாதி என்னுடைய மெயில் மூலம் அவரின் மகள் மற்றும் சிலருக்கு என்னுடைய அலுவலகத்தில் உள்ள கணினி மூலம் நட்பு ரீதியில் பயன்படுத்துவார். மேற்படி மின்னஞ்சல் தகவலை வாதியே எனது மின்னஞ்சலை பயன்படுத்தி அனுப்பியிருக்கலாம். 30.09.2014 ம் தேதியில் ரூ.2,00,015

லட்சத்திற்கான தொகையை NEFT காசோலை மூலம் எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். அன்றைய தேதியிலேயே மேற்படி தேதியிட்டு நான் ரசீது கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-4 என்னால் வாதிக்கு கொடுக்கப்பட்டது என்றாலும் அதில் உள்ள முத்திரையும் எங்கள் நிறுவனத்திற்குரியது என்றாலும் சரியல்ல. வழக்கின் வாதி என்னிடம் 20.08.2014 ம் தேதியில் வா.சா.ஆ-2 மூலம் Reteater panel கேட்டு Order கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சாதனத்தை எவ்வாறு பொருத்துவது என்றும் அதற்கான உபகரணங்கள் என்ன என்பதும் எனக்கு தெரியாது. மேற்படி Order காரணமாகத்தான் வா.சா.ஆ-3 ல் கண்ட தொகை அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் வாதி என் அலுவலகத்திற்கு எத்தனை முறை வந்துள்ளார் என்றால் சுமார் 30 முறை வந்துள்ளார். வாதி ரூ.2,00,015 க்கான தொகையை எனக்கு அனுப்பிய பிறகு நான் பொருள் கொடுக்காததால் 14.03.2015 ம் தேதி வா-சா.ஆ-11 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வா.சா.ஆ-11 ல் 3 ம் பத்தியில் நான் வாதிக்கு மின்அஞ்சல் அனுப்பிய விவரத்தை சுட்டிக்காட்டினேன் என்றால் சரிதான். மேற்படி சாதனம் தயாராகி கொண்டிருப்பதாகவும் தசரா விடுமுறை என்பதாலும் பொருட்களை விரைந்து அனுப்பிவிடுவோம் என்று நான் கூறியதாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 17.11.2014 ம் தேதியில் எங்களால் பொருட்களை அனுப்பமுடியாது என்றும் எங்களை இந்த வேலையில் இருந்து விட்டுவிடுங்கள் என்று சொல்லி வாதி விலாசத்திற்கு 17.11.2014 ம் தேதியிட்டு வாதியின் மின்னஞ்சல் விலாசத்திற்கு குறிபிட்டு எழுதியுள்ளதை வா.சா.ஆ.11 வழக்கறிஞர் அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் அனுப்பவில்லை. வா.சா.ஆ-11 க்கு நான் வா.சா.ஆ-13 பதில் அறிவிப்பு நான் அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 அறிவிப்பில் நான் வழக்கின் வாதிக்கு கொடுத்த மின்னஞ்சல் தகவல் பற்றிய விவரத்தை மறுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-11 அறிவிப்பை படித்துபார்த்தபின்பாவது சைபர் கிரைமில் வாதியின் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு தொகையையும் தராமல், பொருளையும் கொடுக்காமல் இருந்ததால் வாதி திருநெல்வேலி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவின் இரசீ வா.சா.ஆ.10 என்றால் சரிதான். அதில் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். திருநெல்வேலி டவுண் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நானும் அங்கேதான் குடியிருந்து வருகிறேன் என்றாலும் சரிதான். விசாரித்த பின்பாவது

நான் சைபர் கிரைமில் சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய கணினியை பயன்படுத்தி மின்னஞ்சல் மூலம் வழக்கின் வாதி பொய்யான தகவலை அவருடைய விலாசத்திற்கே அனுப்பி ஏமாற்றுகிறார் என்று என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிராது தாக்கல் செய்த பிறகும் நான் வாதிக்கு எதிராக குற்ற வழக்கு எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய வா.சா.ஆ-13 பதில் அறிவிப்பில் இவ்வழக்கு தொடர்புடைய பணம் மற்றும் சாதனங்கள் பற்றிய விவரத்திற்கு பதிலாக நடந்து முடிந்த வியாபார பரிவர்த்தனையை சுட்டிக்காட்டி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. Fire extinguiser வாங்கியதற்கு வா.சா.ஆ-3 ல் கண்ட தொகை ரூ.2 லட்சம் நிலுவை தொகைக்கு வரவு வைத்ததாகவும் நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். Fire extinguiser ஐ எப்போது கடைசியாக அனுப்பினேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. ரூ.2 லட்சம் பாக்கி இருக்கிறது என்ற விவரத்தை வழக்கறிஞர் மூலமாக காவல் நிலையம் மூலமோ நடவடிக்கை எடுத்தேனா என்றால் சரிதான். 4 மாத காலத்தில் தொகையை தந்துவிடுவேன் என்று சொன்னதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. என் பதில் அறிவிப்பில் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை என்பதை நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-8 ல் கண்ட விலாசம் என்னுடையதுதான். மேற்படி வா.சா.ஆ-8 ல் கண்ட பால்சன் விஜய்சிங் என்பவரை விசாரித்தேனா என்றால் அவரிடம் பாக்கி தொகையை தரகேட்டு சென்றேன். அவர் பணி ஓய்வு பெற்று விட்டார். எனக்கும் அவருக்கும் கொடுக்கல் வாங்கல் எவ்வளவு இருந்தது என்றால் இல்லை. நான் அனுப்பியதாக சொல்லப்படும் Fire extinguiser க்கு நான் Vat Tax செலுத்தவில்லை என்றால் சரியல்ல. பணத்தை தரவில்லை எனவே நான் செலுத்தவில்லை. பின்னர் நான் தொகையை செலுத்தி வரி செலுத்தினேன். மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Fire extinguiser க்கு செலுத்த வேண்டிய Vat Tax ஐ வாதிதான் செலுத்தினார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 பி.சா.ஆ-5 மற்றும் பி.சா.ஆ-6 ஆவணத்திற்கும் வாதிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ-2 ஆவணம் Fire extinguiser வாங்கியதற்கான work order என்றால் சரிதான். அதில் Vat தொகை எவ்வளவு என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ-1, 2, 3 ஆவணங்கள் Fire extinguiser வாங்கிய வகைக்கானது என்றும் அதற்கும் இந்த வழக்கின் பரிகாரத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான். Fire extinguiser

வாங்கிய பொருளுக்கு வாதி தொகை முழுவதையும் செலுத்திவிட்டார். அதற்கு நான் இரசீதும் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-15 ஆவணம் வழக்கு வாதி பணத்தை வங்கி மூலமாக செலுத்திவிட்டு என்னிடம் ஒப்புதல் வாங்கியதற்கானது என்றாலும் முத்திரையும் என்னுடையது இல்லை. 18.03.2024 ல் மொத்த தொகை ரூ.2,70,000 ரொக்கமாக பெற்றுக்கொண்டு கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 16, 17 பற்றி என்னுடைய முதல் விசாரணையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டிருக்கும் பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.